முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.19.01.2026

O.S No. 88/2023

வா.சா.1- லட்சுமணன்

1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கின் ஆவணங்களை படித்து பார்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி.பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வா.சாஆ 1 ல் கிழக்கு பக்கம் தெரு , தெற்கு பக்கம் ரோடு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. 2 பக்கமும் எனது கடைக்கு வரலாம் என்றால் சரியல்ல. கடை வாசல் தெற்கு பக்கமாக உள்ளது. முதல் மாடியில் வீடு, கிழக்கு பக்கம் வீட்டின் ஜன்னல் உள்ளது. கிழக்கு பக்கமும், தெற்கு பக்கமும் தெரு மற்றும் ரோட்டை பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரி.

தெரு மற்றும் ரோட்டிற்கு இருபக்கத்திலும் வீடுகள் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் கோயிலும் தெற்கு பக்கம் குளமும் உள்ளது. கிழக்கு பக்கமும் தெற்கு பக்கமும் வீடே இல்லை. வடக்கு பக்கம் வீடு குடியிருப்புகள் உள்ளது. வழக்கு சொத்தின் தெற்கு பக்கம் குளம் இருப்பதாக சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். வாசாஆ 1 ஆவணத்தில் தெற்கு பக்கம் ரோடு இருப்பதாக சொல்லியிருப்பது தவறு என்றால் இல்லை. ரோட்டிற்கு அடுத்து குளம் உள்ளது.

நான் பெற்ற வரைபட அனுமதியானது 05.01.2021 ல் வாங்கபட்டது என்றால் சரி. அந்த வரைபடத்தில் கடை என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது என்ன விதமாக கடை என்று சொல்லப்படவில்லை என்றால் சரி. புதிய மரங்களை எடுத்து பர்னிச்சர் செய்தும் கோயில் சம்மந்தமான வேலை செய்தும் கொடுப்பேன். பழைய மரச்சாமன்களை பழுதும் பார்ப்பேன் மர அறுவை இயந்திரம் என்னிடம் இல்லை. மரத்தை இழைக்கக்கூடிய இயந்திரம்

என்னிடம் உள்ளது. மரத்தை செதுக்கும் போதும் இழைக்கும் போதும், துகள்கள் வரும் என்றால் சரி. வாசா-ஆ 8 ஆவணத்தில் சேவைக்கான தொழில் என்று பதிவு செய்துள்ளேன் என்றால் சரி. 16.03.2023 ம் தேதி 3 ம் பிரதிவாதி எனக்கு அனுப்பிய அறிவிப்பிற்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்தேனா என்றால் எனது வழக்கிறிஞர் மூலம் 3 ம் பிரதிக்கு அனுப்பிவைத்தேன். வழக்கறிவுப்பு மட்டுமே செய்துள்ளேன் என்றாலும் 3 ம் பிரதியின் அறிவிப்பிற்கான ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. 6 ம் பிரதி இந்த வழக்கின் தொடர்பாக மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்ற கிளையில் நீதிப்பேராண்மை மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரி,. அது நிலுவையில் இருக்கும் போது நான் தாக்கல் செய்த இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல. தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. மரம் இழைப்பதற்கான இயந்திரத்தில் இணைக்கப்பட்ட மோட்டார் ஆனது மாற்றி வேறு மோட்டார் இணைக்கமுடியுமா என்றால் முடியும்.

நான் அளவுக்கு அதிகமான பவர் உள்ள மோட்டார்களை மரத்திற்கு ஏற்றார்போல் அதன் தன்மைக்கு அளவிற்கும் கருத்தில் கொண்டு மோட்டார்களை மாற்றி வேலை பார்ப்பேன் என்றால் சரியல்ல. 3 HP மோட்டார் மட்டுமே இணைத்து ஓட்ட முடியும் .குறைவான அளவோ ,கூடுதலான அளவோ இணைத்தால் இயந்திரம் ஓடாது. மரத்திற்கு ஏற்றார்போல் அறுவைக்கான பிளேடு மாற்றப்படும். பெரிய மரங்களை அறுக்கும் போது கடினமான மரங்களை அறுக்கும் போதும் அதிகப்படியான துகள்கள் வெளியேறும் என்றால் சரியல்ல. அனைத்து மரங்களுக்கும் ஒரே மாதிரியான துகள் வெளியேறும்.

பொதுமக்களுக்கு இடையூறு எற்படுத்தாமல் தொழில் செய்ய வேண்டும் என்றால் சரி. தனி நபரோ , பொதுமக்களோ, 1 முதல் 5 பிரதிக்கு கடிதம் அனுப்பும் போது அவர்கள் நடவடிக்கை எடுக்க கடமை பட்டவர்கள் என்றால் சரிதான். 14.03.2022 ம் தேதி 6 ம் பிரதி 4 ம் பிரதிக்கு மனு கொடுத்ததன் அடிப்படையில் சம்பவ இடம் பார்வையிட்டு 16.03.2023 ம் தேதி

எனக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரி. நான் நடத்தும் மரப்பட்டறையின் காரணமாக பொதுமக்களுக்கு ஆஸ்துமா போன்ற தொந்தரவு வர வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. மாதம் சராசரியாக மின்கட்டணம் ரூ 2000 த்திலிருந்து 2500 வரை வரும். அதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது. நான் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல.

6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வா.சாஆ 13 ஆவணம் யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் பஞ்சாயத்தில் வாங்கினேன். அதன் விஸ்தீரணம் 450 ச.அடி ஆகும். மொத்தம் எத்தனை ச.அடி என்றால் 900 அடியாகும். கீழே கடை, மேலே வீடு ஆகும். கீழ்தளம் தொழில் நடத்தி வருகிறேன். தொழில் நடத்தி வர அனுமதி பெற்றுள்ளேன். ஊராட்சி மன்ற தலைவருக்கு தொழில் நடத்தும் இடத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்க அதிகாரம் இல்லை என்றால் தெரியாது.

DTCP and LPA போன்ற சட்டப்பூர்வ அமைப்புகள் தொழில் நடத்த அனுமதி கொடுக்க இருக்கிறது என்பது தெரியுமா என்றால் தெரியாது. மொத்த இடத்தின் பரப்பளவு 530 ச,அடி என்றால் சரி,. முன்பக்கம் மற்றும் பின்பக்கம் பக்கவாட்டில் இடம் எதுவும் விட்டுள்ளேனா என்றால் இல்லை. வரைபடத்திலும் இல்லை என்றால் சரி. உண்மையில் இடத்தை சுற்றி காலி இடம் விடாமல் கடடிடம் கட்ட அனுமதி வழங்க சட்டப்படி முடியாது என்றாலும் அவ்வாறு வழங்கப்பட்ட வரைபடம் சட்டப்படி செல்லாது என்றாலும் தெரியாது.

இடத்தை வாங்குவதற்கு முன்பு கொல்லப்பட்டறை நடத்தியதாக சொல்லப்பட்டதற்கு ஆவணம் எதும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் எனக்கு முன்பாக இருந்த சுடலைமுத்து நாடார் கொல்லப்பட்டறை நடத்தி வந்த ஆவணம் நான் வாங்கினேன் . அதனை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்கிறேன். எனக்கு எதிராக 6 ம் பிரதி எத்தனை

புகார் கொடுத்தார் என்றால் தெரியாது. எனது இடத்தை எந்த தேதியில் அரசு அலுவலர் பார்வையிட்டார் என்றால் PDO அலுவலர் வந்தார். தேதி ஞாபகம் இல்லை. 3 ம் பிரதி வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரி.

3 ம்பிரதி எனது பட்டறையை மூடுவதற்கு உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரி. 16.09.2025 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்குள் பட்டடறையை மூட உத்தரவு விடப்பட்டதா என்றால் சரி. அந்த உத்தரவின் அடிப்படையில் மூடப்பட்டதா என்றால் இல்லை. பட்டறை இயக்காமல் மூடியுள்ளேன். இது குறித்து 6 ம் பிரதி மதுரை உயர் நீதிமன்றத்தில் நீதிபோராணை மனு எண் 15844/2023 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரி. அந்த நீதிப்போரணையில் 06.01.2026 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் அந்த இடத்தில் பட்டறை இழுத்து மூடப்பட்டது என்று அரசு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில் மனு முடிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் உத்தரவு என்ன என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்கத்தெரியாது., என்னிடம் காட்டப்படும் பிராதில் ஆங்கிலம் இருப்பதால் எனக்கு தெரியாது.

உயர்நீதிமன்ற உத்தரவிற்கு முன்பே நான் இடத்தை காலி செய்து விட்டு தற்போது Infructuous ஆன வழக்கை வீம்பிற்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ 12 ஆவணம் விஸ்வகர்மா சமுதாயத்தில் இருந்து ஊர்தலைவர் எனக்கு சான்றிதழ் வழங்கினார். வாசாஆ 12 ஆவணத்தை வழங்க எந்தவிதமான சட்டப்பூர்வமான அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சாஆ 1 ,2,5,9,10 ஆகிய ஆவணங்களுக்கு நான் நடத்தி வருவதாக சொல்லும் பட்டறைக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்றால சரியல்ல. வா.சாஆ 8 உதயம் பதிவு சான்றிதழானது கணினியில் நான் கொடுக்கும் தகவலை வைத்து ஆட்டோமெட்டிக்காக பதிவு செய்யப்படும் என்றாலும் வழக்கு இடத்தை சம்மந்தப்பட்ட அதிகாரி வந்து பார்வையிடமாட்டார் என்றாலும் எனக்கு தெரியாது. வாசாஆ 10 வீட்டு வரி

ரீசீது ஆவணத்திற்கும் தொழிலுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் தொழில் நடத்துவதற்கு பஞ்சாயத்து, சிறு தொழில் அமைச்சகம், தொழில் வரி,. அல்லது தொழில் உரிமம் போன்ற ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

வாசாஆ 11 மின் கட்டணம் வீட்டு உபயோகத்திற்கானது என்றால் சரியல்ல. வாசாஆ 11 ஆவணமானது தொழிலுக்காக பிறப்பிக்கப்பட்ட கட்டண ரசீது இல்லை என்றால் சரியல்ல. மின் இணைப்பு பெற்று அதற்குரிய உபகரணங்கள் வைத்து தொழில் செய்யும்போது அது குடிசை தொழிலுக்குள் வரையறை செய்யமுடியாது என்றால் சரியல்ல. இந்த மரப்பட்டறை பயன்பாட்டில் இருந்தால் கண்ணுக்கு தெரியாத பொடிகள் காற்றின் மூலம் பரவி பக்கத்து வீட்டில் இருப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தி சுற்றுசுழல் மாசு ஏற்படுத்தும் என்றால் சரியல்ல.

பட்டறையை சீவும் போது மோட்டார் ஒலி அதிகமாகவும் அருகில் இருப்பவர்களுக்கு ஒலி மாசு ஏற்படும் என்றால் சரியல்ல. கன்னியாகுமரி பல்வேறு குடியிருப்பு பகுதியில் நான் செய்வது போல் தொழில் செய்வதாக சொல்லியதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 6 ம் பிரதி பல அரசு அதிகாரிகளுக்கு மனு தாக்கல் செய்து அதன் பின் வழக்கு சொத்து பார்வையிட்டு எனது தொழிலை மூடுதற்கு பல துறை அதிகாரிகள் உத்தரவிட்டும் நான் அதனை மதிக்காமல் தொடர்ந்து நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. எனது வீட்டை தொட்டு மேற்கு பக்கம் 6 ம் பிரதியின் வீடு உள்ளது என்றால் சரி.

4 ம் பிரதிவாதியிடம் நான் தொழில் அனுமதி கேட்டு கொடுத்த மனுவில் தேவையில்லை என்று திருப்பிவிட்டாக நான் சொல்லியதற்கு ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் வாய்மொழியாக சொன்னார்கள் எழுத்துமூலமாக கொடுக்கவில்லை. வனத்துறையில் இருந்து இடத்தை பார்வையிட்டு சிறுதொழிலுக்கு அனுமதி

தேவையில்லை என்று சொன்னதாக சொல்லியிருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் 4 ம் பிரதியும் வனத்துறையும் அனுமதி கொடுக்கமுடியாது என்று மறுத்ததை திரித்து தேவையில்ல என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக ஆசாரி வேலையில் தினசரி வருமானம் ரூ 1000 திலிருந்து 1300 ஆகும். முன்பு கேரளாவில் ஆசாரி வேலைக்கு சென்று வந்தேன் என்றால் சரி.

நான் நடத்திய் தொழிலால் 6 ம் பிரதியின் மனைவி ஆஸ்துமா ஏற்பட்டு, நுரையீரல் தொற்று ஏற்பட்டு 70 வயதில் இறந்து விட்டார் என்றால் மாசுபாட்டால் இறக்கவில்லை . அவர் வயது முதிவு காரணமாக இறந்து விட்டார். எனது மரப்பட்டறை தொழிலால் ஏற்பட்ட ஒலி, காற்று மாசால் 6 ம் பிரதியின் குடும்பம் வசிக்கவே முடியாத சூழல் ஏற்பட்டடுள்ளது என்றாறல் சரியல்ல. தற்போது மரப்பட்டறை நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. பல வழக்குகள் , மனுக்கள் , காரணமாக ஏற்பட்ட நெருக்கடியால் நான் பட்டறையை மூடிவிட்டேன் என்றாலும் இந்த வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது அல்லது என்றாலும் சரியல்ல.